BILLS SECTION

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 28th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Handloom weavers (repayment of loan)

* 1121 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ௵ ஆகஸ்ட் ௴ 20௳-ல் 316-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி, கூட்டுறவு இயக்கத்தில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்திருக்கும் கடனைத் திருப்பிக் கட்டாதவர்களின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றனவா ?

(இ) அப்படியானால் எத்தனை பேர் ?

The HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) 17.

SRI S. M. ANNAMALAI : ஸார், அவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதற்கு முக்கிய காரணம் வறுமைதான். அப்படி வறுமையின் காரணமாக கொடுக்க முடியாமல் போனால், அவர்களுடைய சொத்தை ஜப்தி செய்கிறார்கள். குறிப்பாக, அவர்கள் வைத்திருக்கும் கைத்தறிகளை ஜப்தி செய்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிடி டெவலப்மெண்ட் பண்டிலிருந்து நெசவாளிகளுக்கு கடனாகக் கொடுக்கப்படுவது. இம்மாதிரி இவர்கள் பணம் கட்டத் தவறினால், மீதிப் பேருக்கும் கொடுக்கலாமா, வேண்டாமா என்ற சந்தேகம் ஏற்படும். அவர்களை சிறு சிறு தவணைகளாகத்தான் கொடுக்கச் சொல்கிறோம். வேண்டுமென்றால் அவர்கள் இதைக் கட்டி விடலாம். அதற்கு கனம் அங்கத்தினர்களும் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். இம்மாதிரியான கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய மனப்பான்மையை இதிலே இன்னும் கொஞ்சம் வளர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. SUBBIAH : ஸார், இந்தமாதிரி கடன்பட்ட கைத்தறி நெசவாளிகளுக்கு பல தவணைகளிலே கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுவதற்கு அந்த டிகிரிமேல் ஏற்பாடு செய்ய கோர்ட்டுகளுக்கு அரசாங்கம் ஏதாவது உத்திரவு கொடுக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சிறு சிறு தவணைகளில் கொடுக்கத்தான் இப்போது ஏற்பாடு. கடன் வாங்கினால் ஒன்றுமே கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறார்கள். இதுதான் அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டம்.